**செய்தி வெளியீடு எண். 516** **நாள். 02.07..2008**

**செய்தி வெளியீடு**

## பெட்ரோல் / டீசல் தட்டுப்பாடு

**உடனடி நடவடிக்கை எடுக்க எண்ணெய் நிறுவனங்களுக்கு**
**மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ.வ. வேலு அவர்கள் அறிவுரை**

எண்ணெய் நிறுவனப் பிரதிநிதிகளுடன் மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ. வ. வேலு அவர்கள் தற்போதுள்ள பெட்ரோல் / டீசல் இருப்பு நிலவரம் குறித்தும், விற்பனை மற்றும் தொடர் நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசனை நடத்தினார்கள்.

பொது மக்களின் தேவைக்கேற்ப பெட்ரோல், டீசல் விற்பனை நிலையங்களுக்கு அனுப்புவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

உயர்ரக எரிபொருட்களினால், எரிதிறன் மற்றம் பிற நன்மைகள் உள்ளது எனில், மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி மக்களாக விரும்பி வாங்கினால் விற்கலாம் என்றும் உயர்ரக எரிபொருள் மட்டுமே விற்பனை செய்யும் நிலையங்களை உடனடியாக சாதாரண வகை எரிபொருளையும் விற்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.

அடுத்த 30 நாட்களுக்கு தேவையான இருப்பினை தமிழகத்திலுள்ள எண்ணெய் கிடங்குகளில் இருப்பாக வைக்க வேண்டும் என்றும், பங்குகளில் குறைந்தபட்சம் 30 சதவீதம் இருப்பு தொடர்ந்து பராமரிக்கப்பட வேண்டும் எனவும், இது குறித்து பங்குகளில் இருப்பு இல்லாமல் போவதை தடுக்க ஒவ்வொரு நிறுவனமும் சிறப்பு தொடர்பு அலுவலர் மூலம் காலை, மாலை நேரங்களில் பங்குகளிலிருந்து இருப்பு விவரம் பெற்று இருப்பு இல்லாத பங்குகளுக்கு உடன் எரிபொருள் அனுப்பப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.

பெட்ரோலியப் பொருட்கள் விநியோகம் சீரடைய தேவையான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், ஆரம்ப இருப்பு, முடிவு இருப்பு ஆகிய விவரங்களை அரசு செயலாளர், உணவுத் துறை மற்றும் ஆணையாளர், உணவுப்பொருள் வழங்கல் துறை ஆகியோருக்கு அனுப்ப வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. அதிக விலைக்கு விற்பவர்கள், பதுக்குபவர்கள் மற்றும் தவறு புரியும் பெட்ரோலிய டீலர்களின் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அறிவுறுத்தினார்கள்.

மேலும், மாவட்டந்தோறும் எண்ணெய் நிறுவனங்கள் நுகர்வோர் அமைப்புகளுடனும், மாவட்ட நிர்வாகத்துடனும் இணைந்து பெட்ரோலியப் பொருட்களின் விரயத்தை தவிர்த்து முறையாக பயன்படுத்த வேண்டிய அவசியம் பற்றி பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்தில் அரசு செயலாளர், ஆணையாளர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு. சி. பூவண்ணன், முதுநிலை மண்டல மேலாளர், இந்துஸ்தான் பெட்ரோலியக் கழகம், சென்னை, திரு. ஆர். இராதாகிருஷ்ணன், பொது மேலாளர் (தெற்கு பகுதி), திரு.எம்.வி.வி. ஷர்மா, மண்டல ஒருங்கிணைப்பாளர், இந்துஸ்தான் பெட்ரோலியக் கழகம், சென்னை, திரு. எச். நடராஜன், தலைமை மண்டல மேலாளர் (நேரடி விற்பனை), இந்துஸ்தான் பெட்ரோலியக் கழகம், சென்னை, திரு.பி. வெங்கடராமன், தலைமை மேலாளர் (சில்லறை விற்பனை), தமிழ்நாடு மாநில அலுவலகம், இந்தியன் ஆயில் கழகம், திரு. ஏ. பாண்டியன், துணைப் பொது மேலாளர் (இயக்குபவர்), தமிழ்நாடு மாநில அலுவலகம், இந்தியன் ஆயில் கழகம், திரு. வி. கோபாலகிருஷ்ணன், துணை பொது மேலாளர் (சில்லறை விற்பனை), தமிழ்நாடு மாநில அலுவலகம், இந்தியன் ஆயில் கழகம், திரு.எம்.ஆர்.வி. ஷர்மா, மண்டல ஒருங்கிணைப்பாளர், பெட்ரோலியம் கன்சர்வேஷன் ரிசர்ச் அசோசியேஷன், சென்னை ஆகியோர் கலந்து கொண்டனர்.

**************************************

## வெளியீடு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9